Literacy for a Billion

Movie: Vaagai Sooda Vaa
Year: 2011

Song: Chenga Choolaikara
Lyricist: Vairamuthu

செங்க சூளைக்காரா
செங்க சூளைக்காரா
காஞ்ச கல்லு
வெந்து போச்சு வாடா
செங்க சூளைக்காரா
செங்க சூளைக்காரா
காஞ்ச கல்லு
வெந்து போச்சு வாடா
மேகம் கூடி
இருட்டி போச்சு வாடா

சுட்ட சுட்ட மண்ணு கல்லாச்சு
நட்ட நட்ட கல்லு வீடாச்சு
நச்சு நச்சு பாட்டா
நம்ம பொழப்புதான்
பச்சை மண்ணா போச்சு
வித்த வித்த கல்லு என்னாச்சு
விண்ண விண்ண தொட்டு
நின்னாச்சு
மண்ணு குழி போல
நம்ம பரம்பரை
பள்ளம் ஆகி போச்சு
அய்யனாரு சாமி
அழுது தீர்த்து பார்த்தோம்
சுரணை கெட்ட சாமி
சோத்தைதான கேட்டோம்
காளவாச கங்கு போட
கல்லு முள்ள வெட்டி வாடா
செங்க சூளைக்காரா
செங்க சூளைக்காரா

காஞ்ச கல்லு
வெந்து போச்சு வாடா
மேகம் கூடி
இருட்டி போச்சு வாடா

மண்ணு மண்ணு மட்டும் நோராக
மக்க மக்க வாழ்ந்து வாராக
மழை மழை வந்து
மண்ணு கரைகையில்
மக்கள் எங்கு போக
இந்த களிமண்ணு வேகாது
எங்க தலைமுறை மாறாது
மண்ண கிண்டி வாழும்
மண்ணு புழுவுக்கு
வீடு வாசல் ஏது
அய்யனாரு சாமி
கண்ண திறந்து பாரு
எங்க சனம் வாழ
உன்ன விட்டா யாரு
எதிர்காலம் உனக்காக
எட்டு எட்டு வச்சு வாடா
தந்தானே நானே
தந்தா நானே நானே
வேர்வை தண்ணி
வீட்டுக்குள்ள
வெளக்கு ஏத்தும் வாடா
வேர்வை தண்ணி
வீட்டுக்குள்ள
வெளக்கு ஏத்தும் வாடா

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*